**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.139/2024**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மோகினா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லையா | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.02.2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.10.2020ம் தேதி, 11.40 மணியளவில் பொன்னுச்சாமி என்பவரது மகன் செல்லத்துரை என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் சட்டாப்பையை (கரண்டி) வைத்து அவரது வீட்டில் அதே தேதியில் காலை 10.00 மணியளவில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). முன்னந்தலையில் வலது மற்றும் இடது பக்கத்தில் 3 x 1 x 1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரது தலைப்பகுதிக்கு சீ.டீ.ஸ்கேன் எடுத்து பார்த்ததில் எந்தவிதமான

எலும்பு முறிவு சேதமும் ஏற்படவில்லை. அவர் 29.10.2020 ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும். சட்டாப்பை போன்ற ஆயுதத்தினால் தாக்கப்படும் போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்டவர் கடையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலோ, வேறு மருத்துவமனையிலோ முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. விபத்து பதிவேட்டில் காயம்பட்டவரின் மனைவி அவரின் சொந்த வாகனத்தில் அழைத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள் இருசக்கரவாகனத்தில் செல்லும் போது தவறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.16 10:43:29 +0530